## அறிமுகம்

# ஆராதனையின் அர்த்தம்

ஆராதனை என்பதற்குரிய “worship” என்ற ஆங்கில வார்த்தையானது, பழைய ஆங்கில மொழியில் உள்ள *weorth* (“worth” - “தகுதியான”) மற்றும் *scipe* (“ship” - “ஒரு பின்விகுதிச்சொல்”) என்பவற்றின் இணைப்பு வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டது. “Ship” என்றால் friend*ship*, fellow*ship*, மற்றும் relation*ship* என்பவற்றில் உள்ளதுபோன்று, ஒரு நிலை, தகுதி, அல்லது சூழ்நிலை என்று அர்த்தப்படுகிறது. “Worth-ship” (worship) என்பது ஒருவரால் ஆராதிக்கப்படும் கருப்பொருளில் காணப்படக்கூடிய தகுதி அல்லது நிலையை விளக்கப்படுத்துகிறது. தேவன் - தமது மாபெரும் தன்மை, மகத்துவத்தன்மை, மற்றும் அற்புதமான செயல்கள் ஆகியவற்றில் - நமது ஆராதனை, மதிப்பு, மற்றும் வழிபாடு ஆகியவற்றைப் பெறத் தகுதிவாய்ந்தவராக இருக்கிறார். ரால்ஃப் P. மார்ட்டின் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> [“Worship”] என்பது மரியாதை செலுத்துதல்கள் மற்றும் கனமளித்தல்கள் என்ற எண்ணப்போக்கினால் தூண்டப்பட்ட செயல்கள் என்ற அர்த்தம் தருவதாக உள்ளது, அல்லது அது இன்னொரு நபர் அல்லது பொருளின் தகுதித்தன்மையை விவரிக்கிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் சந்தர்ப்பப்பொருளில் ஆராதனை என்பது தெய்வீகத்தைத் தொழுதுகொள்வதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது.[1]

எபிரெய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடோ அல்லது கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புதிய ஏற்பாடோ, “worship” என்ற ஆங்கில வார்த்தைக்கு இணையாக உள்ள ஒரு வார்த்தையைக் கொண்டிருப்பதில்லை. இருப்பினும், இவ்விரு ஏற்பாடுகளுமே ஆராதனை நடவடிக்கைகளை விவரிக்கும் வார்த்தைகளைக் கொண்டுள்ளன. “Worship,” என்று மிகவும் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டுள்ள *shahah* என்ற எபிரெய வார்த்தை, “ஒருவர் தாழவிழுந்து பணிந்துகொள்ளுதல்” என்று அர்த்தப்படுகிறது. *‘Abad* என்ற எபிரெய வினைச்சொல், *latreuo* என்ற கிரேக்க வினைச்சொல்லைப் போன்றே “சேவித்தல்,” என்றே அர்த்தப்படுகிறது.[2]

*Proskuneo* என்ற கிரேக்க வார்த்தை - இது “நோக்கி முத்தமிடுதல்” என்ற நேரடி அர்த்தமுடையது - ஆராதனையைக் குறிப்பிடுவதற்குப் புதிய ஏற்பாட்டில் மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையாகும் (மத்தேயு 4:10; லூக்கா 24:52; யோவான் 4:20, 21). ஒரு நபருக்கு முன்பாகத் தாழவிழுந்து பணிந்துகொண்டு, தரையையோ, அவரது பாதங்களையோ, அல்லது அவரது உடையின் விளிம்பையோ முத்தம் இடுதல் என்பது சாதாரணமாக நடைமுறையில் இருந்த வழக்கமாகும். இது பெர்சியர்கள்

தங்கள் தெய்வமாகக் கருதிய அரசர்களுக்கும், கிரேக்கர்கள் தங்கள் விக்கிரகங்கள் மற்றும் வணக்கத்திற்குரிய பொருட்கள் ஆகியவற்றிற்கும் செய்த செயலாக இருந்தது. *Proskuneo* என்ற வார்த்தையின் அர்த்தமானது நமது ஆங்கில வார்த்தையான "worship," என்பதற்கு மிகச்சரியானதாக இராதிருக்கையில், இது வேறு எந்தக் கிரேக்க வார்த்தையைக் காட்டிலும் மிக அண்மையாக ஆராதனை என்ற கருத்தை விளக்கப்படுத்துகிறது.

புதிய ஏற்பாட்டின் மற்ற வார்த்தைகள் "ஆராதனை" அல்லது "ஆராதிப்பவர்" என்று அவ்வப்போது மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவைகள் *proskuneo* என்ற கிரேக்க வார்த்தையைப்போல, வழிபாடு அல்லது முறையான ஆராதனை என்பதன் அர்த்தத்தைக் கொண்டிருப்பதில்லை, ஆனால் இவைகள் "ஆராதனை" என்ற வார்த்தையின் வடிவங்களைப் பயன்படுத்தி மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.[3]

## ஆராதனை பற்றிய கடந்தகால எண்ணப்போக்குகள்

நாம் ஆராதனையைப் பற்றிப் புரிந்துகொள்வதற்குக் கடந்தகால எண்ணப்போக்குகள் நமக்கு உதவக்கூடும். பழங்கால மெசொப்பொத்தாமியாவில் இருந்த படைப்பு பற்றிய புராணத்தில், தேவர்களைச் சேவிப்பதற்காக மனிதர்களைப் படைத்தலைத் தேர்ந்துகொள்பவராக மார்டுக் என்பவர் குறிப்பிடப்படுகின்றார். மார்டுக் மனிதனைப் படைத்தபோது இருந்த அவரது நிலை, பின்வரும் கூற்றினால் பண்புபடுத்தப்படுகிறது: "தேவர்கள் கோபந்தணிந்தவர்களாக இருக்கும்படிக்கு அவர்களைச் சேவித்தலுக்கு மார்டுக் பொறுப்பாளியாக இருப்பார்!"[4]

இந்தக் கண்ணோக்கானது தேவர்களை உழைப்பில் இருந்து விடுவித்து, அவர்களுக்கு மகிழ்வை அனுபவித்தலைக் கொண்டுவர மனிதனை ஒரு ஊழியக்காரன் என்ற வகையில் முன்வைக்கிறது. இப்படிப்பட்ட ஊழியத்தின் மூலமாக, மனிதகுலமானது தேவர்களுக்கு மரியாதை செய்து அவர்களின் தேவைகளைச் சந்திப்பதன்மூலம் அவர்களைச் சேவிக்க வேண்டியதாக இருந்தது. இப்படிப்பட்ட தேவைகளை மனிதன் சந்திக்க முடியும் என்ற கருத்து, தேவர்கள் மனிதன் தேவர்களுக்குக் கொடுக்கக் கூடிய உழைப்பைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் ஆக்குகிறது. ஜான் E. பர்கார்ட் என்பவரால் பின்வரும் நல்ல கவனித்தல் ஏற்படுத்தப்பட்டது:

> எபிரெயர்களைப் பொறுத்தமட்டில், சேவித்தாலும் இல்லையென்றாலும்; தேவன் தேவனாகவே இருக்கிறார், மற்றும் தேவன் தேவனுடைய ஊழியக்காரருக்கு பலன் ஏதாவது தருவதற்காக அல்ல, ஆனால் தேவன் தமது சுயமதிப்பினிமித்தமாகவே சேவிக்கத் தக்கவராக இருக்கிறார். தேவன் தமக்குத் துதிசெலுத்தப்பட வேண்டும் என்று கேட்பதில்லை; ஆனால் தேவன் என்ற வகையில், தேவன் அதை [துதியை] தேவனாக இருப்பதன் உரிமையினாலேயே வற்புறுத்துகிறார்.[5]

பிளேட்டோ எழுதிய *Euthyphro* என்ற புத்தகத்தில், அவர் நமது ஆராதனையினால் தேவர்கள் பாதிக்கப்படுவதோ அல்லது மாற்றப் படுவதோ இல்லை என்று வாதிட்டார். நாம் அவர்களுக்குக் கொடுக்கக் கூடியவற்றில் இருந்து அவர்கள் பலன் அடைவதில்லை மற்றும் அவர்கள் நம்மிடத்தில் இருந்து எதையாவது பெறும் தேவைக்கு அப்பால் உள்ளனர். அவர்கள் எல்லாவற்றையும் கொண்டுள்ளனர், அவர்களுக்கு ஏதொன்றும் தேவைப்படுவதில்லை. பர்கார்ட் பின்வருமாறு குறிப்பிட்டார்,

> *ஆராதனை என்பது தேவனுக்காக அல்ல, ஆனால் நமக்காக ஏற்பட்டுள்ளது என்று விவாதிப்பதற்கு இந்த விவாதத்தை, மத்திய கால இறையிலாளர்களில் ஒருவரான தாமஸ் அக்வினாஸ் என்பவர் எடுத்துக்கொண்டார். இதற்குப்பதிலாக, பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த, கால்வின் என்பவர் தேவனைத் தக்கவாறு வழிபடுதலே கிறிஸ்தவத்தின் முக்கியமான நோக்கமாக உள்ளது என்று பதில் அளித்தார். ... மற்றும், இருபதாம் நூற்றாண்டில், வழிபாட்டின் கருத்துப்பொருளை எடுத்துக்கொண்ட, எவெலின் அன்டர்ஹில் என்பவர் "ஆர்வம் குன்றச்செய்த அகமகிழ்வு" மற்றும் "முற்றிலு மான வழிபாட்டுப் பதில்செயல்" ஆகியவை பற்றிப் பேசுகிறார். இப்படிப்பட்ட அகமகிழ்வுகளினால், ஆராதனை என்பது உண்மை யிலேயே* worth-ship [*தகுதித்தன்மை*] *என்பதன் விஷயமாக உள்ளது. அது தேவனை மதிப்பீட்டின் மையமாகக் கொண்ட வழிபடும் பதில் செயலாக, தேவன் தமக்குள்ளாகவே தகுதி வாய்ந்தவராக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வதாக உள்ளது.*[6]

## ஆராதனை பற்றிய வசனரீதியான கருத்து

தேவன் துன்மார்க்கத்தில் இருந்து தனியே பிரிந்த நிலையில், தமது இயல்பில் பரிசுத்தராக இருக்கிறார் என்று வேதவசனங்களில் முன்வைக்கப்பட்ட கருத்து, நமது தேவைகளுக்கு அன்புடன் அளிப்புகள் செய்வதில் நம்முடன் அவரை அடையாளப்படுத்துகிறது. நாம் தேவனு டைய மாபெரும் தன்மை பற்றிப் புரிந்துணர்ந்தவர்களாக மற்றும் அவர் நமக்கு நன்மையான எல்லா ஈவுகளையும் அருளக்கூடிய மேன்மையானவர் (யாக்கோபு 1:17) என்பதற்குப் பதில்செயலாக அவரை நாம் ஆராதிக்க வேண்டும்.

நமது ஆராதனை என்பது நாம் தேவனுக்குச் செய்யக்கூடியவற்றை அல்ல, ஆனால் அவர் நமக்குச் செய்கின்றவற்றையே ஆதாரமாகக் கொண்டு அமைய வேண்டியதாக உள்ளது. நாம் அவரது மகத்துவம் மற்றும் மாபெரும் தன்மை ஆகியவற்றை உணர்ந்தறிவதால், நமது வழிபாடு, மதித்தல், பக்தி, மற்றும் பாராட்டுதல் ஆகியவற்றை ஆராதனையில் காண்பிக்க நம்மால் என்ன செய்யமுடியும் என்று நாட வேண்டும். இப்படிப்பட்டவை தேவனாலே எதிர்பார்க்கப்படுகின்றன மற்றும் இது நன்றிநிறைந்த இருதயத்தில் இருந்து பெருகியோடினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. வற்புறுத்தப்பட்ட நடவடிக்கைகளும் இயந்திரத்தன மான பதில்செயல்களும் புறம்பான வெளிப்படுத்துதல்களாக மாத்திரம்

உள்ளன; அவைகள் ஆராதனை என்று தேவனால் கருதப்படுவதில்லை.

ஆராதனை என்பது தேவனுடைய மகத்துவமான வல்லமையையும் கிருபையுள்ள செயல்களையும் நாம் புரிந்துகொள்ளுதலின் விளைவாக இருக்க வேண்டும். நாம் இவற்றிற்கு அவருடைய சித்தத்தின்படி வெளிப்படுத்தப்பட்ட நன்றியுணர்வுடன் பதில்செயல் செய்ய வேண்டும். தேவனே நமது ஆராதனையின் கவனக்குவிப்பும் ஆதாரமூலமுமாக இருக்கிறார். தேவனை ஆராதிக்கத் தேவனைப் பற்றிய உணர்வுகள் நம்மை நகர்த்துகின்றன என்பதைத் தவிர, ஆராதனை என்பது நம்மிடத்தில் இருந்து தொடங்குவதில்லை.

தேவனுக்கு நமது ஆராதனை தேவைப்படுவதில்லை, ஆனால் அவரது மாபெரும்தன்மை, நற்குணம், மற்றும் அன்புநிறைந்த இரக்கம் ஆகியவற்றினிமித்தம் நாம் அவரை ஆராதிப்பது அவசியமாக உள்ளது. அவரது இருப்புநிலை மற்றும் அவர் செய்கின்றவைகளைக் குறித்து நாம் மேன்மை பாராட்டுதலின் பொங்கிப்பெருகும் நிலையில் இருந்து நமது பதில்செயல் வரவேண்டும். நாம் ஆராதிக்கத் தவறினால், நமது சார்பில் அவ்வளவு கிருபையாகச் செயல்படுகிற, [ஆராதிக்க] தகுதிவாய்ந்த தேவனை நாம் அலட்சியம் செய்து மதியாதிருக்கிறோம் என்றாகிறது.

இருதயத்தின் உண்மைத் தன்மையுடன் இணைந்திராத புறம்பான வெளிப்பாடுகள், தேவனுக்கு வெறுமையானவைகளாக, அர்த்தமற்றவை களாக, மற்றும் தகுதியற்றவைகளாக உள்ளன. ஆன்டி T. ரிட்சி Jr., என்பவர் பின்வருமாறு கூறினார்,

> ... உண்மையான விஷயங்களுக்குப் பதிலாகப் புறம்பான வடிவம் மற்றும் "நடவடிக்கைகளை" நாம் அடிக்கடி பரிதாபத்திற்குரிய வகையில் தவறாக [உண்மையென்று] கருதுகிறோம். "சபைக்குச் செல்லுதல்" என்பது, அவ்வாறு சென்ற ஒருவர் ஆராதித்திருக்கிறார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. "சபைக்குச் செல்லுதல்," என்பதற்கு மாறாக "ஆராதிக்கச் செல்லுதல்" என்று கூறினால் நாம் வார்த்தைகளின் பயன்பாட்டில் மிகவும் சரியானவர்களாக இருப்போம், இருப்பினும் மேம்படுத்தப்பட்ட சொல்லாக்கமானது நடைமுறை திருத்தப்பட்டது என்று அர்த்தப்படாது. ... எந்தச் செய்முறைகளும் ஆராதிப்பவரின் சொந்த வெளிப்பாடுகளாக இல்லாதவரை அவைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ... நாம் இந்த "நடவடிக்கைகளில்" மேம் போக்காக, இயந்திரத்தனமான வகையில் செயல்பட்டுள்ளோம் என்ற உண்மை ஆராதனையுடன் சமப்படுத்தப்பட முடியாது.[7]

தேவன் ஒன்றிணைந்த ஆராதனையை விரும்புகிறார். நமது ஆராதனையானது, ஆராதனைக்கு என்று கட்டியமைக்கப்பட்ட கட்டுமானங்களில், பொதுகூடுகைகள் என்பதோடு மாத்திரம் மட்டுப் படுத்தப்படாதிருப்பினும், கிறிஸ்தவ ஒன்றுகூடுதல்கள் முக்கியமானவை களாக உள்ளன. ஒன்றுகூடி ஆராதித்தல் என்பது தனிநபர் ஆராதனை அளிக்க இயலாத பக்தியின் உயரங்களுக்கு மனித இருதயங்களை உயர்த்தக்கூடிய பகிர்ந்துகொள்ளும் தருணங்களை அளிக்கிறது. ஆசீர்வாதங்களுக்காகத்

தேவனிடத்தில் வேண்டுகோள் விடுத்தல் என்பதுடன் கூடுதலாக, அவரைப் பற்றிய நமது உள்ளான சிந்தனைகளையும் அவரது அளிப்புகளுக்கு நமது மதிப்பையும் அவர் அறியச் செய்தல் என்பதும் ஆராதனையில் நமது நோக்கமாக உள்ளது. ஆராதனையில் நாம் பெருமளவு பயனடைய முடியும் என்றாலும்கூட, தேவனைக் கிட்டிச் சேர்ந்து அவருடன் உரையாடுதல் என்பதே நமது மாபெரும் தேவையாக - நமது உள்ளான மனிதனுக் கான தேவையாக - இருக்கிறது. நமது ஆராதனையில், தனிப்பட்ட பயன்கள் என்பவை நமது வாழ்வில் நம்மைப் படைத்தவரின் மதிப்பை வெளிப்படுத்துதலுக்கான உள்ளான தேவைக்கு இரண்டாம் பட்சமாகவே உள்ளன.

ஆராதனையில் அடங்குகிற பல்வேறு செயல்கள் மற்றும் எண்ணப் போக்குகளை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், முதலில் நாம் எது ஆராதனையல்ல என்பதைப் பற்றி அறிய வேண்டும். ஆராதனை என்பது மட்டுமீறி வெளிப்படுத்தப்படும் உணர்வுகள் மற்றும் உணர்வெழுச்சி களாகவோ அல்லது ஆவேசமான உடல்ரீதியான செயல்பாடுகளாகவோ இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. அது மனிதத் திறமைகள் மற்றும் முயற்சியை தனிச்சிறந்த வகையில் நிகழ்த்துதல் அல்லது காட்சிப்படுத்து தலாக மாத்திரம் இருப்பதில்லை. அது மனித உணர்வு வெளிப்பாடுகளின் சுதந்திரமாயிருப்பதில்லை.

அதே வேளையில், ஆராதனை என்பது வெறும் சடங்காச்சாரமாக இருப்பதும் கிடையாது. சடங்கின் ஆர்ப்பாட்டத்தைவிட அதிகமான [மற்ற விஷயங்களே] தேவனுக்குப் பிரியமாயிருக்கின்றன. தேவன் தமது நாமத்தில் நாம் கூடிவர வேண்டும் என்று விரும்புகிறார், ஆனால் மற்றவர்களுடன் கூடிவருதல் மாத்திரம் ஆராதனையாகிவிடாது.

இப்போது நாம் தேவனை ஆராதிப்பதில் உள்ளடக்கப்பட வேண்டியவை என்ன என்பதுபற்றி அறியக் கடந்து செல்வோம். ஆராதனையில் பின்வருபவை உள்ளடங்கி இருக்கின்றன ...

- தேவனே மகிமைப்படுத்துதல்
  "மகிமைப்படுத்து" - எபி.: *pa'ar* (ஏசா. 60:21ஆ; 61:3ஆ; 66:5); எபி.: *kabed* (சங். 22:23; 86:12); எபி.: *kebod* (சங். 29:2); கிரேக்கு.: *doxazo* (மத். 5:16; 9:8).
- பயபக்தியை வெளிப்படுத்துதல்
  "பயபக்தியை" வெளிப்படுத்துதல் - எபி.: *gur* (சங். 33:8); கிரேக்கு.: *phobeo* (மத். 9:8); கிரேக்கு.: *deos* (எபி. 12:28). இந்த வார்த்தைகளுக்குப் பின்னால், அனேகமாக மதித்தல் என்ற கருத்தில் பயம் என்ற அடிப்படை அர்த்தம் உள்ளது.
- தேவனை மகிமைப்படுத்துதல்
  "மகிமைப்படுத்து" - எபி.: *gadal* (சங். 35:27; 40:16; 70:4; மல். 1:5); கிரேக்கு.: *megaluno* (நடபடிகள் 19:17).
- தேவனைக் கனப்படுத்துதல்
  "கனப்படுத்து" - எபி.: *kabed* (ஏசா. 29:13); கிரேக்கு.:

*doxazo* (ரோம. 1:21; 1 தீமோ. 6:16). இவ்விரண்டு வார்த்தைகளுமே "மகிமைப்படுத்துதல்" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன (வெளி. 4:9, 11; 5:12, 13).

- பயந்திருத்தல்
  "பயந்திரு" - எபி.: *yare'* (சங். 2:11; 5:7; 119:38); கிரேக்கு.: *eulabeia* (எபி. 12:28).
- அவரைத் துதித்தல்
  "துதி" - எபி.: *barak* (சங். 16:7; 26:12).
- அவரை ஸ்தோத்திரித்தல்
  "ஸ்தோத்திரி" - எபி.: *halal* (சங். 104:35); எபி.: *tehillah* (ஏசா. 42:8, 10, 12); எபி.: *zamar* (சங். 30:4; 40:3); கிரேக்கு.: *aineo* (லூக். 19:37; அப். 2:47).
- அவரை உயர்த்துதல்
  "உயர்த்து" எபி.: *rum* (சங். 18:46; 21:13).
- களிகூருதல்
  "களிகூரு" - எபி.: *gil* (சங். 35:9); எபி.: *samach* (சங். 63:11); கிரேக்கு.: *chairo* (பிலி. 4:4).
- நன்றிநிறைவாக இருத்தல்
  "நன்றி செலுத்து" எபி.: *yadah* தேவன் (சங். 7:17; 9:1); கிரேக்கு.: *eucharisteo* (லூக். 17:16; கொலோ. 3:17).

## ஆராதனை என்பது ஆராதனையாகவே உள்ளது

உண்மையான ஆராதனை என்பது தேவன் செய்துள்ளவற்றைப் பற்றி நினைத்துப் பார்த்தலாக, அவரது மாபெரும்தன்மை மற்றும் நற்பண்பு பற்றிய தியானமாக, மற்றும் அவரது பயபக்திக்குரிய பிரசன்னத்தை உணர்ந்தறிதலாக உள்ளது. ஆராதிப்பவருக்கு, குழுவினருக்கு உணர்வுகளை எழுச்சி பெறச்செய்யும், உணர்வுகளைத் தூண்டியெழுப்பும், அல்லது ஆராதனையில் தூண்டுதல் செய்ய உற்சாகமூட்டும் ஒரு தலைவர் தேவையில்லை. தங்கள் இருதயங்களில் நன்றிசெலுத்துதல் அல்லது துதித்தல் இல்லாதவர்களுக்கே இப்படிப்பட்ட யுக்திகள் அவசியமாக உள்ளன. ஆராதனை என்பது நன்றியுணர்வு மற்றும் அன்பு ஆகியவற்றினால் நிறைந்துள்ள, தாங்கள் ஆராதிக்கத் தேடுகிற தேவனிடத்தில் உள்ள நற்பண்பு மற்றும் தகுதித்தன்மை ஆகியவற்றை நினைப்பதினால் அசைக்கப்படுகிற இருதயங்களின் மறைவிடங்களில் இருந்து தானாகவே பெருகிவருகிறது.

ஆராதனையில் மன எழுச்சிபெறச் செய்வதற்கு, கர்த்தரை வழிபடுவதிலும் தியானிப்பதிலும் அவரை நோக்கிப்பார்க்க ஏங்கும் தாழ்மையான இருதயத்திற்கு, வேறு எந்தப் புறம்பான முயற்சியும் பதிலியாக இருக்க முடியாது. ஆராதனைக்கு உகந்த ஏற்பாடுகள் மற்றும் அமைவுகளை அளிக்க நாம் முயற்சி செய்ய வேண்டியிருக்கையிலும்கூட, இவைகள் ஆராதனையை உறுதிப்படுத்தவோ அல்லது உண்டாக்கவோ இயலாது. கூட்டப்பட்ட

ஒலி அளவுகள், விசேஷ விளக்கு வெளிச்ச ஏற்பாடுகள், உடல்ரீதியான அசைவுகள், மற்றும் விரைவாகக் கடந்து செல்லும் நடவடிக்கைகள் போன்றவை உணர்வெழுச்சியை உண்டாக்கலாம் மற்றும் உணர்வுகளைத் தூண்டலாம்; ஆனால் அவைகளால் ஒரு வெறுமையான இருதயத்தினுள் துதியை வைக்க இயலாது. ஆராதனை என்பது நடவடிக்கை மற்றும் ஆரவாரம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது.

ஆராதனை வெளிப்புறத்தில் இருந்து அமைக்கப்பட இயலாது, ஆனால் அது மனித இருதயத்தின் உள்ளிருந்து வரவேண்டும். அது இந்த அண்டத்தின் கிருபையும் வல்லமையும் உள்ள தேவனுக்குத் துதியையும், பக்தியையும், அன்பையும் வெளிப்படுத்த நாடுகிற இருதயத்தின் விளைவாக உள்ளது. இந்தச் சிந்தனைகளும் உணர்வுகளும், அமைதியான ராஜரீகமான வகையிலோ அல்லது கிளர்ச்சி மற்றும் சந்தோஷம் ஆகியவற்றின் வெளிப்பாடுகளிலோ வெளிப்படுத்தப்படலாம். உண்மையான ஆராதனை என்பது இருதயத் திற்குப் புறம்பே இருக்கிற தூண்டுதல் காரணிகளினால் அல்ல, மாறாக இருதயம் உள்ளிருந்தே தூண்டப்படுவதில் இருந்து வருவதாகவே உள்ளது.

தேவனை ஆராதிக்க விரும்புபவர்கள், ஆராதனையைத் தூண்டுவதற்கு மதக்குழுக்களின் திட்டமிடப்பட்ட முயற்சிகளை மறக்க வேண்டும். அதற்குப்பதிலாக, நாம் தேவனை அறிய வேண்டும், அவரது வழிகளைப் புரிந்துகொள்ள வேண்டும், மற்றும் அவர் அளிக்கிற ஆசீர்வாதங்களை ஆழந்து சிந்திக்க வேண்டும். தேவன் யார் என்பதையும் அவர் என்ன செய்கிறார் என்பதையும் புரிந்துணர்தலானது அவரை ஆராதிப்பதற்கான விருப்பத்திற்கு - மனிதரால் உருவாக்கப்பட்ட திட்ட நிகழ்ச்சிகள் எல்லாவற்றினாலும் நிறைவேற்றப்பட முடியாத அருஞ்செயலுக்கு - வழிநடத்தும். இந்த அணுகுமுறையின் அடிப்படையில் தேவனை ஆராதிக்க நாடுவதில், நாம் தேவனுக்கு ஏற்புடையவகையில் நமது ஆராதனையை வெளிப்படுத்தும் வழிகளில் இருக்கிறோம் என்பதை நிச்சயப்படுத்த வேண்டும்.

## தொகுப்புரை

தேவனை ஆராதிப்பதற்கு நாம் நமது இருதயத்துடன் அணுகும்போது நம்மால் முடிந்த அளவு மிகச்சிறப்பான வகையில் செயல்படுகிறோம். ஆராதனையின் எந்த செயல்பாடும் தேவனுடன் ஐக்கியமாகுதலின் முக்கியத்துவத்தைப் பெற்றிருப்பதில்லை. தேவனுடைய தகுதித்தன்மையை உணர்ந்தறிதலில் நமது இருதயங்களின் வெளிப்பாடுகள் ஒன்றித்து இருத்தலானது மனித அனுபவத்தின் எதிராளி எதையும் கொண்டிரா திருக்கலாம்.

---

குறிப்புகள்

[1]Ralph P. Martin, "Worship," in *The International Standard Bible Encyclopedia*, rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988),

4:1117-18. [2]*Latreuo என்பது பிலிப்பியர் 3:3; எபிரெயர் 9:9; 10:2 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. ரோமர் 12:1 மற்றும் எபிரெயர் 9:1, 6 வசனங்களில், latreia* என்ற பெயர்ச்சொல் "service" [தமிழில் "ஆராதனை"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [3]*Eusebeo ("ஆராதனைக்குரியவை," "பயபக்தி" என்று அர்த்தப்படுகிறது; நடபடிகள் 17:23); sebazomai ("பயபக்தியைக் காண்பித்தல்"* ["ஸ்தோத்திரித்தல்"]; *ரோமர் 1:25); sabasma ("ஆராதனைக்குரியது"; நடபடிகள் 17:23; 2 தெசலோனிக்கேயர் 2:4); theskeia ("மதரீதியான"; கொலோசெயர் 2:18); sebo* (தேவன்மீது "பயம்" அல்லது *"பயபக்தி"; மத்தேயு 15:9; மாற்கு 7:7; நடபடிகள் 16:14; 18:7, 13; 19:27)* ஆகியவை *சில உதாரணங்கள் ஆகும்.* [4]James B. Pritchard, ed., *The Ancient Near East: An Anthology of Texts and Pictures* (Princeton: Princeton University Press, 1958), 36. [5]John E. Burkhart, *Worship* (Philadelphia: Westminster Press, 1982), 16. [6]Ibid. [7]Andy T. Ritchie Jr., *Thou Shalt Worship the Lord Thy God* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1969), 6-7.